Offices of Magazines.

@ * 125 Q.—THIRU NEELA NARAYANAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the closure of the Offices of "Kalki", "Gokulam" and "Swarajya" magazines, has been brought to the notice of the Government;

(b) if so, whether due prior notice was given to the employees working in such Offices; and

(c) the steps taken by the Government to reopen them or to provide relief to the workers?

பத்திரிகை அலுவலகங்கள்

திரு. நீலநாராயணன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "கல்கி, கோகுலம், சுயராஜ்யா" ஆகிய பத்திரிக்கை அலுவலகங்கள் மூடப்பட்டு இருக்கின்றன என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், இது குறித்து அவைகளில் பணிபுரிந்த தொழிலாளர் களுக்கு முறையான அறிவிப்பு அனுப்பப்பட்டதா ?

(உ) அவைகளை மீண்டும் திறக்கும்படி செய்யவும், இல்லையேல் அத்தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் நிறுவனங்கள் மூடப்பட்டதுபற்றி தொழில் தகராறு சட்டம் பிரிவு 12 (3) கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின்படி தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய தொகைகள் கொடுக்கப்படுகின்றன.

@ 24—2—1978-ம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

1976 பிப்ரவரி 28]

திரு. நீலநாராயணன் : இந்த நிறுவனங்களில் பணியாற்றிய தொழிலாளர்கள் அந்த நிறுவனத்தைத் தாங்களே ஏற்று நடத்த வேண்டும் என்றும், அதற்கு அரசாங்கம் அனுமதியும், நிதி வசதியும் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்களா ? அதற்கு அரசு ஒப்புதல் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படி அந்தத் தொழிலாளர்கள் கேட்கவில்லை. அவர்கள் சார்ந்துள்ள தொழிற் சங்கத்தின் சார்பாக நான் ஏற்கனவே சொன்னபடி, தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டு காம்பன்சேஷன், ஈட்டுத் தொகையும் வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் பாதிக்கப்பட்ட 70 தொழிலாளர்களில் 40 பேரை திரு. டி. ஆர். ஆர். தாம் நடத்தும் 'அலிபாபா' இதழில் சேர்த்துக் கொண்டுள்ளார். மீதமுள்ள 30 பேரை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரி, அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே மனு கொடுத்து, அது பரிசிலனை செய்யப்பட்டு, அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படும் வாய்ப்பு உருவாக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நீண்ட பாரம்பரியம் மிக்க 'கல்கி' பத்திரிக்கை மூடப்பட்டது நிதி வசதி காரணத்தாலா அல்லது தொழிலாளர் தகராறு காரணத்தாலா என்று அறிய விரும்புகிறேன். அதே போல சுதேசமித்திரன் பத்திரிக்கையும் மூடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்திடம் முறையிட்டுக் கொண்டு, தங்கள் வேலைக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 300 தொழிலாளர்களுக்குக் குறைவாக உள்ள தொழிற்சாலைகளை மூடுவதற்கு அரசு அனுமதி தேவையில்லை. எனவே அவர்கள் அவைகளைத் தங்கள் இஷ்டப்படி மூடிவிடுகிறார்கள். 50 பேருக்கு மேலிருந்தால் 25 (FFA) பிரிவின் கீழ் அறிவிப்பு கொடுத்தால் போதும். அறிவிப்பைக் கொடுத்துவிட்டு மூடிவிடுகிறார்கள். அது மூடப்பட்டதன் காரணம் 'financial crises' அதாவது பொருளாதார முடக்கம்—பொருளாதார சங்கடம் என்றுதான் கூறுகிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : சுதேசமித்திரன் பத்திரிக்கை மூடப்பட்டதற்கும் இந்தக் காரணம் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மூடப்படுகிற எல்லாத் தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்களும், பத்திரிக்கைக்காரர்களும் இதைத்தான் காரணமாகச் சொல்லுகிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : சொல்லப்படுகிற காரணங்கள் உண்மையானவைதாஞ என்று அரசு ஆராய்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அரசு தனக்குள்ள அதிகாரத்திற்குட்பட்டு ஆராய்கிறது. அதாவது within its limitations.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

(1) அரசு ஊழியர் மறியல் போராட்டம் குறித்து.

திரு. எம். சங்கரலிங்கம் : மேலவையில், என்.ஜி.ஓ.வினர் போராட்டத்தைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோது, அவையின் முன்னவர் அது குறித்து பதிலளிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்ததும், என்.ஜி.ஓ.வினர் விடுதலை செய்து, பேச்சு வார்த்தை நடத்தி நல்ல சுமுகமான முடிவைக் காண்பார்கள் என்று சொன்னுர்கள். அவர்கள் விடுதலை செய்யப்பட்டு பேச்சு வார்த்தைகளும் நடந்ததாக இந்த அவையிலே அறிவிக்கப்பட்டது.

ஆனுல் இன்றையதினம் செய்தித் தாட்களைப் பார்த்தால் பேச்சு வார்த்தை முறிந்துவிட்டதாகவும் என்.ஜி.ஓ.வினர் தரப்பில் வைக்கப்பட்ட 15 கோரிக்கைகளில் ஒன்றுகூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும், நிதியாதாரம் இல்லாத கோரிக்கைகள்கூட ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றும், எனவே அவர்களின் போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவை நடந்து கொண்டிருக்கும்போது, அதிலும் குறிப்பாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரவேண்டிய முக்கியமுள்ள இந்தப் பிரச்சினையில் அரசாங்கத்தின் சார்பில் விவரம் தெரிவிக்கப்படும் என்று நினைத்தேன். எனவே முதலமைச்சர் அவர்களோ அல்லது முதலமைச்சரின் சார்பில் அமைச்சர்களில் யாரேனும் ஒருவரோ இதைப்பற்றித் தெளிவுபடுத்தியிருக்கலாம். இதைப்பற்றி நான் குறை கூறுவதாக நினைக்கக்கூடாது. பத்திரிக்கையில் வந்த செய்தியை வைத்து, இந்த அவைக்கு உண்மை நிலையை விளக்கி விவரம் தந்திருக்கலாம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.